SIVANANDA SARASWATHI SEVASHRAM

## SIVANANDA HOME FOR AGED

## ADMISSION OF SENIOR CITIZENS (BOTH SINGLE AND COUPLES)

Sivananda Saraswathi Sevashram is one of the few organizations in the State which provides a home for orphan children and the old age people under one roof. It is an ideal environment for the senior citizens to spend their later part of life in a calm and congenial atmosphere in the ashram. The organization provides a shelter and food with basic medical facilities in the old age home. We admit senior citizens of both gender and couples who can take care of themselves and stay in a green and serene atmosphere.

We provide dormitories for single occupants and separate room accommodation for couples (including a kitchen) with good infrastructure, cot, beddings, locker cupboard and a chair.

### FOOD

- Only Vegetarian food will be provided.
- Coffee / Tea will be provided in the morning by 6 am.
- Breakfast is served at 8.30 am - only South Indian dishes like Idli/Pongal/Upma are provided.
- Lunch is served at 1 pm with Rice, Poriyal, Sambar, Rasam and Butter milk.
- Evening snacks with Tea will be provided at 4 pm.
- Dinner is served around 8 pm with Dosa / Pongal / Vegetable rice / Chapathi
- Special care is taken to cook quality food with fewer spices and less salt and sugar to keep the elders in a healthy condition.
- On festival days and on the day of feast provided by the donors, elders are provided with special meals which include vadai, payasam, appalam including fruits and sweets.

## TERMS AND CONDITIONS FOR ADMISSION

- ADMISSION WILL BE FINALISED ONLY AFTER MEETING & INTERVIEWING THE APPLICANT AND THE KIN/CARETAKER.

- Usually elders above the age of 60 years are only admitted in the Home.
- Elders with good health only are admitted i.e. they should be able to manage their day to day activities viz washing clothes and other basic requirements of their own.
- Doctors from SRM hospital visit Ashram on daily basis from 9 am to 5 pm and attend to the members with ailments. They issue basic medicines to the elders and other medicines are to be purchased by the members only. Hence we prefer to have elders with normal health only.
- If a member develop any major ailment and is unable to manage his/her day to day activities, the care taker/kin will be informed and they have to manage their treatment and drop back the member in a healthy condition.
- In case of any unforeseen emergencies, arrangements will be made for admission of members in SRM Hospital, Potheri. However, taking care of them at the hospital will be the responsibility of the care takers/their kins.
- Relations of members can meet them at any time during the day from 7 am to 5 pm. However, they are not allowed to stay in their room under any circumstances.
- While their stay in the Ashram, members should actively participate in the ashram activities like daily morning prayer, meeting and functions conducted from time to time.
- Management would be glad if the members come forward to assist the ashram in rendering voluntary services to the orphan children like assisting them in their studies, teaching them worldly experiences or any other co-curricular activities like Music, dance and storytelling in which they have experience. Members who have experience in clerical and office administration activities are also welcome and can give a helping hand in the administration of the Ashram.
- SMOKING AND ALCOHOL IS STRICTLY PROHIBITED INSIDE THE ASHRAM.
- NON-VEGETARIAN FOOD IS STRICTLY NOT ALLOWED INSIDE THE ASHRAM.
- If a member wants to leave the ashram, one month notice should be given and then only will be allowed to leave the ashram.
- In the event of unforeseen death of any member, their son/daughter/relative on file will be informed for further proceedings.

## FEES STRUCTURE

- Cheques, Online Transactions etc., are accepted for payment of Mess Fees every month and is to be paid on or before 10th of every month.

Single Accommodation

- Mess fees of Rs 3250/- per month is to be paid by every member. One time donation of Rs 5000/- is collected during admission for upkeep of buildings and other expenses. A refundable deposit amount of Rs 7500/- is collected during admission. This amount is refundable when the members leave the ashram. At the time of leaving, if there are any substantial damages to property, the relevant costs will be deducted from this deposit.

  - The deposit amount will be refunded only if the members stay in the old age home for a period of one complete year, unless there is an unforeseen demise of the member in the first year.

  - While leaving the ashram, an amount of Rs 1500/- will be deducted from the security deposit as one time cleaning charges.

Couple Accommodation

- Mess fees of Rs 7250/- per month is to be paid by every couple. Even if one person stays in the couple's cottage, 7250/- per month must be paid. One time donation of Rs 10,000/- is collected for the upkeep of buildings and other expenses. A refundable deposit amount of Rs 15,000/- is to be paid. This amount is refundable when the members leave the ashram. At the time of leaving, if there are any substantial damages to property, the relevant costs will be deducted from this deposit.

  - The deposit amount will be refunded only if the members stay in the old age home for a period of one complete year, unless there is an unforeseen demise of the member in the first year.

  - While leaving the ashram for any reason, an amount of Rs 2500/- will be deducted from the security deposit as one time cleaning charges.

BASIC AMENITIES

✓ Banking. Indian Bank, MM Nagar has its extension counter in the ashram campus.

✓ Medical. Doctors from SRM hospital visit Ashram on daily basis from 9 am to 5 pm and attend to the members with minor ailments. A nurse is employed to be available 24x7 inside the Ashram.

MANAGEMENT RESERVES THE RIGHT TO ADMIT OR REJECT ANY ADMISSION.

The advantage of this old age home is that the members will have tiny tots in orphanage like their grand children to show love and affection and it will be a treat to watch the services they do when aged persons needs change or relaxation.

SERVICE TO THE ELDERS IS THE SERVICE TO GOD.

THE BEST SERVICE YOU CAN DO IS TO SPREAD OUR SERVICES TO MANY FRIENDS, WELL WISHERS AND RELATIVES AND OTHERS.

MAY GOD BLESS YOU AND YOUR FAMILY.

We look forward to your constant support in our welfare projects.

FOR AND ON BEHALF OF
SIVANANDA SARASWATHI SEVASHRAM
OLD NO 20 NEW NO 4, KAMBAR STREET,
EAST TAMBARAM, CHENNAI – 600 059
Phone : +91 44 22391078 or + 91 44 22392444
Email : info@buildhope.org
WEB SITE  http:/www.buildhope.org

CHEQUE/DRAFT MAY BE DRAWN IN FAVOUR OF
“SIVANANDA SARASWATHI SEVASHRAM”

# <u>சிவானந்தா முதியோர் இல்லம்</u>

## <u>உறுப்பினர் சேர்க்கை (தனி மற்றும் தம்பதி)</u>

தமிழ்நாட்டில் அனாதை குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் ஒரே இடத்தில் இருப்பிடம் அளிக்கும் சில தொண்டு நிறுவனங்களில் ஒன்று சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரம். முதியோர்களுக்கு தங்கள் வாழ்வின் பின் பாதியை பசுமை நிறைந்த அமைதியான சுற்றுச்சூழலில் செலவிட உகந்த இடமாக சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரம் விளங்குகிறது. சிவானந்தா முதியோர் இல்லத்தில் தங்க இருப்பிடம், உண்ண உணவு மற்றும் அடிப்படை மருத்துவ வசதிக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இங்கு தங்கள் தினப்படி வேலைகளை தாங்களே செய்துகொள்ளக்கூடிய வயது முதிர்ந்தவர்கள் (இருபாலாரும்) அனுமதிக்கப்படுவார்கள்.

இங்கு தனி முதியோருக்கு பொது அறை தங்குமிடமும் தம்பதிகளுக்கு சமையலறையுடன் கூடிய தனி அறை தங்குமிடமும் ஒதுக்கப்படும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு கட்டில், படுக்கை, பீரோ மற்றும் ஒரு நாற்காலி கொடுக்கப்படும்.

<u>உணவு</u>

சைவ உணவு மட்டுமே வழங்கப்படும். ***அசைவ உணவு ஆஸ்ரம வளாகத்தில் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டாது.***

காலை 6 மணிக்கு காபி / தேநீர் வழங்கப்படும்.

காலை உணவு 8:30 மணிக்கு பரிமாறப்படும். இதில் இட்லி / பொங்கல் / உப்புமா போன்ற தென்னிந்திய உணவு வகைகள் மட்டுமே பரிமாறப்படும்.

மதிய உணவு 1 மணிக்கு சாதம், பொரியல், சாம்பார், ரசம் மற்றும் மோர் பரிமாறப்படும்.

மாலை 4 மணிக்கு தேநீருடன் சிற்றுண்டி வழங்கப்படும்.

இரவு உணவில் 8 மணிக்கு தோசை / பொங்கல் / சப்பாத்தி / காய்கறி சாதம் போன்றவை பரிமாறப்படும்.

முதியோர்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு உணவு வகைகளில் மசாலா, உப்பு மற்றும் சர்க்கரை குறைவாக சேர்க்கப்பட்டு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

பண்டிகை நாட்கள் மற்றும் நன்கொடையாளர்கள் அன்னதானம் வழங்கும் நாட்களில் முதியோர்களுக்கு வடை, பாயசம் மற்றும் அப்பளம் கூடிய சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

<u>**உறுப்பினர் சேர்க்கை**</u>
<u>**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**</u>

**உறுப்பினர் சேர்க்கை நேர்முக தேர்வுக்குப் பின்னரே உறுதி செய்யப்படும்.**

**பொதுவாக 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் மட்டுமே இல்லத்தில் சேர்க்கப்படுவார்கள்.**

**நல்ல உடல்நலம் கொண்ட தங்கள் தினப்படி வேலைகளை தாங்களே செய்துகொள்ளக்கூடிய நிலையில் உள்ள முதியோர்கள் மட்டுமே இல்லத்தில் சேர்க்கப்படுவார்கள்.**

**உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள முதியோர்களை கவனிக்க தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை SRM மருத்துவமனையின் மருத்துவர்கள் வந்து செல்கிறார்கள். அவர்களுக்கு அடிப்படை மருந்துகளும் வழங்கப்படுகின்றது. மற்ற மருந்து மாத்திரைகள் முதியோர்கள் தங்கள் சொந்த செலவில் வாங்கிக்கொள்ள வேண்டும்.**

**இல்லத்தில் சேர்ந்தபின் உறுப்பினருக்கு ஏதேனும் பெரிய உடல்நலக்குறைவு ஏற்பட்டால் அவர்களின் பிள்ளைகள்/பாதுகாவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். அவர்கள் உறுப்பினர்களை அழைத்துச்சென்று வேண்டிய சிகிச்சைகளை அளித்து மீண்டும் உறுப்பினரை நல்ல உடல்நிலையில் இல்லத்தில் கொண்டுவந்து விடவேண்டும்.**

**உறுப்பினருக்கு ஏதேனும் எதிர்பாராத உடல்நலக்குறைவு ஏற்பட்டால் அவர்களை அருகிலுள்ள SRM மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். இருப்பினும் அங்கு அவர்களை பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு பிள்ளைகள் / பாதுகாவலர்கள் உடையதாகும்.**

**இல்லத்து உறுப்பினர்களின் உறவினர்கள் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை அனுமதிக்கப்படுவார்கள். எந்த சூழ்நிலையிலும் அவர்கள் இல்லத்தில் தங்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.**

**உறுப்பினர்கள் தினசரி பிரார்த்தனை போன்ற ஆஸ்ரம அலுவல்கள் மற்றும் அவ்வப்போது நடக்கும் ஆஸ்ரம நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளவேண்டும்.**

**உறுப்பினர்கள் ஆஸ்ரமத்தில் உள்ள அனாதை குழந்தைகளின் படிப்பில் அல்லது உலக அனுபவம் அல்லது தங்களுக்கு தெரிந்த பாட்டு, நடனம், கதை சொல்லுதல் போன்ற செயல்பாடுகளில் உதவ முற்பட்டால் நிர்வாகம் மகிழ்ச்சியுடன் அதற்கேற்ற ஏற்பாடுகளை செய்யத்தயாராக உள்ளது. எழுத்துவேலை மற்றும் அலுவலக நிர்வாகம் தெரிந்த உறுப்பினர்கள் ஆஸ்ரம அலுவல்களில் உதவி செய்ய வரவேற்கப்படுகிறார்கள்.**

***புகை பிடித்தல் மற்றும் மது அருந்துதல் ஆஸ்ரம வளாகத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.***

**உறுப்பினர்கள் ஆஸ்ரமத்தை விட்டு வெளியேற நினைத்தால், ஒரு மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால் மட்டுமே வைப்பு நிதி திருப்பி அளிக்கப்படும்.**

**உறுப்பினருக்கு எதிர்பாராத மரணம் ஏற்பட்டால், மேற்படி வேலைகளை மேற்கொள்ள எங்கள் கோப்பில் உள்ள அவர்களது பிள்ளைகள்/பெண்கள்/ உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.**

**கட்டண விவரம்**

மாதாந்திர கட்டணம் ரொக்கம் / காசோலை மூலமாக ஏற்றுக்கொள்ளப்படும். இதனை 10 ஆம் தேதிக்குள் செலுத்துதல் அவசியமாகும்.

**தனி முதியோர் (பொது அறை)**

**தனி முதியோர் மாதாந்திர கட்டணமாக ரூ 3250/- செலுத்தவேண்டும். உறுப்பினர் சேர்க்கையின்போது கட்டிட பராமரிப்பு மற்றும் இதர செலவுகளுக்காக ஒருமுறை நன்கொடையாக ரூ 5000/- வசூலிக்கப்படும். மேலும், வைப்பு நிதியாக ரூ 7500/- உறுப்பினர் சேர்க்கையின்போது வசூலிக்கப்படும். இந்த வைப்பு நிதி உறுப்பினர்கள் ஆஸ்ரமத்தில் குறைந்தது ஒரு வருட காலம் தங்கிவிட்டு வெளியேரும் பட்சத்தில் அல்லது எதிர்பாராத மரணம் ஏற்பட்டால் மட்டுமே திருப்பி அளிக்கப்படும். தனி முதியோர் ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறும்போது சுத்திகரிப்பு செலவுகளுக்காக ரூ 1500/- வசூலிக்கப்படும். உறுப்பினர் ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறும்போது ஆஸ்ரம சொத்துக்கள் எதையேனும் சேதப்படுத்தியிருந்தால் அதற்கான தொகை வைப்பு நிதியிலிருந்து கழித்துக்கொள்ளப்படும்.**

**தம்பதிகள் (சமயலறையுடன் கூடிய தனி அறை)**

**தம்பதிகள் மாதாந்திர கட்டணமாக ரூ 7250/- செலுத்தவேண்டும். Couple Cottage-இல் தனியாக தங்கினாலும் அதே மாதாந்திர ரூ 7250/- செலுத்தவேண்டும். உறுப்பினர் சேர்க்கையின்போது கட்டிட பராமரிப்பு மற்றும் இதர செலவுகளுக்காக ஒருமுறை நன்கொடையாக ரூ 10,000/- வசூலிக்கப்படும். மேலும், வைப்பு நிதியாக ரூ 15,000/- உறுப்பினர் சேர்க்கையின்போது வசூலிக்கப்படும். இந்த வைப்பு நிதி உறுப்பினர்கள் ஆஸ்ரமத்தில் குறைந்தது ஒரு வருட காலம் தங்கிவிட்டு வெளியேரும் பட்சத்தில் அல்லது எதிர்பாராத மரணம் ஏற்பட்டால் மட்டுமே திருப்பி அளிக்கப்படும். தம்பதிகள் ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறும்போது சுத்திகரிப்பு செலவாக ரூ 2500/- வசூலிக்கப்படும். உறுப்பினர் ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறும்போது ஆஸ்ரம சொத்துக்கள் எதையேனும் சேதப்படுத்தியிருந்தால் அதற்கான தொகை வைப்பு நிதியிலிருந்து கழித்துக்கொள்ளப்படும்.**

**அடிப்படை வசதிகள்**

**வங்கி. இந்தியன் வங்கி மறைமலைநகர் கிளையின் கூடுதல் வங்கிசேவை அலுவலகம் ஆஸ்ரம வளாகத்தில் உள்ளது.**

**மருத்துவம். தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை SRM மருத்துவமனையின் மருத்துவர்கள் ஆஸ்ரம வளாகத்திற்கு வந்து செல்கிறார்கள். உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கு அடிப்படை மருந்துகளும் இலவசமாக வழங்கப்படுகின்றது. மேலும் நாள்முழுவதும் பணிசெய்ய ஒரு செவிலியர் அமர்த்தப்பட்டுள்ளார்.**

*உறுப்பினர் சேர்க்கையில் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.*

**உறுப்பினர்களின் பேரக்குழந்தைகள் போன்று அன்பும் ஆசியும் வழங்கிட ஆஸ்ரம குழந்தைகள் இருப்பதே சிவானந்தா முதியோர் இல்லத்தின் சிறப்பாகும்.**

**மக்கள் சேவையே மகேசன் சேவை.**

**எங்கள் பணிகளை உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடையே பரப்புவதே நீங்கள் செய்யும் பெரும் சேவையாகும்.**

**எல்லாம் வல்ல இறைவன் தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் ஆசீர்வதிப்பாராக.**

**எங்கள் நலத்திட்டங்களுக்கு தங்கள் ஆதரவை எதிர்நோக்குகிறோம்.**